நாள்: 10.01.2025
OS.337/2019
பெயர் அன்னமயில்
வா.சா.1

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது தம்பி பெயர் அய்யப்பசாமி என்றால் சரிதான். அவருடைய மகளைத்தான் என்னுடைய மகன் திருமணம் செய்துள்ளார். நானும் எனது தம்பியும் நல்ல உறவு முறையில் தான் இருக்கிறோம் என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தை கிடையாது. என் தம்பி மூலமாகத்தான் பிரதிவாதி பாண்டியன் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் மூலமாகத்தான் பழக்கம் என்றும், நான் தெரிந்துகொண்டு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏலச்சீட்டு நடத்தி வந்தேன் என்றும், அதில் பிரதிவாதி ஒரு சந்தாதாரராக சேர்ந்தார் என்றால் சரியல்ல. 1, 3 லட்ச சீட்டு சந்தாரராக 2015 ல் சேர்ந்தார் என்றும், அப்பொழுது அவர் அதற்கு ஆதரவாக தலா 3 புரோநோட்டுக்கள் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி புரோநோட்டுக்களில் ஒன்றை வைத்து உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல்நீதிமன்றத்தில் OS.212/2019 என்ற வழக்கை என் தம்பி தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் பணம் கொடுத்தற்கு தாக்கல் செய்திருப்பார். ஏலச்சீட்டு தொகையில் ரூ,3,70,000-ம் பிரதிவாதி செலுத்தி விட்டார் என்றும், மீதி ரூ,30,000-ம் தான் செலுத்த வேண்டும் என்றும், அதற்கான நான் வாங்கிய வெற்றுப்புரோநோட்டுக்களை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டை பொன்ராஜ் என்பவர் தான் எழுதினார் என்றால் சரிதான். அவர் மட்டும் தான் புரோநோட்டை பூர்த்தி செய்துள்ளார். மேற்படி புரோநோட்டில் எந்தவொரு அடித்தல் திருத்தலும் இல்லை.புரோநோட்டும் எழுதும்போது மாலை 4.00 மணி இருக்கும். அப்பொழுது பாண்டியன், ஈஸ்வரி, ஜெயராஜ், பொன்ராஜ் மற்றும் நான் ஆகிய 5 நபர்கள் இருந்தோம். புரோநோட்டில் ஜெயராஜ் மற்றும் பொன்ராஜ் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். என் தம்பியும் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி பாண்டியன் ஆரம்பத்தில் ஜவுளி தொழில் தான் செய்து வந்தார். புரோநோட்டு எழுதிய 10.08.2018 அன்று புலிகுத்தி கிராமத்தில் அவர் இல்லை என்றும், அவர் வேறு இடத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் அவர் மதுரை கோட்டக்கல்

ஆர்ய வித்யாசாலா என்ற மருத்துவமனையில் காலையிலிருந்து மாலை வரை மருத்துவ சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் சரியல்ல. 10.08.2018 அன்று என்னை அவர் சந்திக்கவும் இல்லை, பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் அன்றைய தேதியில் பணம் கொடுத்திருந்தால் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்ற சரியான விபரத்தை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் வேறு நபரை வைத்து பிரதிவாதியின் கையொப்பத்தை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.